போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும்
நகர அபிவிருத்தி அமைச்சு

**வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி**

# வேலை வாய்ப்பு

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் ஒரு துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகைமைகள் பூர்த்தி செய்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

**கனரக வாகன ஓட்டுநர் - (ஒப்பந்தம்)**

| | |
|---|---|
| **தகைமைகள்** | : க.பொ.த (சா.த) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்<br>மற்றும்<br>கனரக வாகனங்கள் செலுத்துவதற்கு செல்லுபடியான அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கனரக வாகனங்கள் செலுத்துவது தொடர்பாக மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல்<br>**கவனிக்கவும் :** டிராக்டர் வண்டிகள் செலுத்துவது தொடர்பாக அனுபவம் விசேட தகைமையாக கவனத்திற் கொள்ளப்படும். |
| **சம்பளம்** | : முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இன் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும்.<br>(2026.01.01 ஆம் திகதிக்கு அடிப்படை சம்பளம் ரூ.40,834/= + வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு<br>❖ **வேறு அனுகூலங்கள் :**<br>அங்கீகரிக்கப்பட்ட மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு/ மருத்துவக் கொடுப்பனவு/ வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு |
| **வயதெல்லை** | : 18 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். |

விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டுமென்பதுடன், பதவிகளுக்குரிய கடமைகளை வினைத்திறனாக மற்றும் பாதுகாப்பாக நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக் கோவையுடனான விண்ணப்பப்படிவம், கல்வி, தொழில் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தாம் தொடர்பாக விசாரிக்க முடியுமான உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் 2026.10.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு தகைமைகள் பூர்த்திசெய்யாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க திணைக்களமொன்றில், கூட்டுத்தாபனமொன்றில் அல்லது நியதிகள் சபையில் தற்போது சேவையில் ஈடுபடுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், குறித்த பதவிகளுக்கு தெரிவுசெய்யப்படின் அந்த பதவிகளில் வேலை பொறுப்பேற்பதற்கு தமது நிறுவனத்தினால் விடுவிக்க முடியுமென நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
**காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி,**
**இல. 28/10A, கிரிமண்டல மாவத்த, நாவல, ராஜகிரிய.**

**தலைவர்,**
**காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி**
**இல. 28/10A, கிரிமண்டல மாவத்த, நாவல, ராஜகிரிய.**